# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப, (ஓ).

******

முறையீட்டு மனு எண்: 062/மா/2019
ஆணை நாள்: 27–05–2019

திரு. ஜே. வேலாயுதம்,
கவுந்தப்பாடி, ஈரோடு --- முறையீட்டு மனுதாரர்

திரு. இளங்கோவன்,
சேலம். --- எதிர் மனுதாரர்

ஈரோடு மாநகராட்சி, கவுந்தப்பாடி போஸ் தெரு, எண்.28 என்ற முகவரியில் வசிக்கும் திரு. J. வேலாயுதம் என்பவரது 04.03.2019 மற்றும் 05.04.2019 நாளிட்ட மனுக்கள் முறையே 8.4.2019 மற்றும் 9.4.2019 ஆகிய தேதிகளில் இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு, முறையீட்டு மனு எண்.062/2019-என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

ஆணை:

ஈரோடு மாநகராட்சி, கவுந்தப்பாடி, போஸ் தெரு, எண்.28 என்றி முகவரியில் வசிக்கும் திரு. J. வேலாயுதம் என்பவர் தனது 04.03.2019 மற்றும் 05.04.2019 நாளிட்ட மனுக்களில் தனது காலஞ்சென்ற பெரியப்பா சச்சிதானந்தம் மனைவி லட்சுமி அம்மாள், சேலம் டவுன் அரிசிபாளையம் R.D. பால் தெருவில் குடியிருந்து வந்ததாகவும், அவர் 2016-ஆம் ஆண்டு இறந்துவிட்டதாகவும் இவரது வீட்டில் வேலைசெய்து வந்த திரு. இளங்கோவன் மற்றும் அவரது மனைவி திருமதி. மல்லிகா சதித்திட்டம் போட்டு, திருமதி. லட்சுமி அம்மாளுக்குச் சொந்தமான நான்கு மெத்தை வீடுகளையும் திரு. இளங்கோவன் மகன் திரு. சிவசுப்பிரமணியம் பெயரில் விற்பனை கிரயம் செய்துள்ளார் என்றும் எழுதி வாங்கப்பட்ட போலி பத்திரம் எண்.1026/15-ஐ ரத்து செய்யவும் சம்மந்தப்பட்டவர்கள் மீது கைது நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் திரு. J. வேலாயுதம் ஏற்கனவே இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்திருந்த மனுவில் திரு. இளங்கோவன் பெயரில் உள்ள சொத்து வரியினை ரத்து செய்து தன் பெயருக்கு மாற்றம் செய்ய கோரியிருந்தார். மனுதாரரின் கோரிக்கை மற்றும் சேலம் மாநகராட்சி, சூரமங்கலம்

வார்டு அலுவலக உதவி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டு, முறையீட்டு மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகாமலும், ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்காமலும் இருந்து வருவது மனுதாரர் தனது கோரிக்கை சம்மந்தமாக அளிப்பதற்கான விளக்கமோ, ஆவணங்களோ ஏதும் இல்லை என கருதி இம்முறையீட்டு மனு மீதான தொடர் நடவடிக்கையினை கைவிடலாமெனவும், முறையீட்டு மனுதாரர் பெயர் மாற்றம் செய்வதற்கான உரிய ஆவணங்கள் வழங்கும் பட்சத்தில் உரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள சேலம் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி 4.3.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ ஆணையில் ஆணையிடப்பட்டது.

தற்போது முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள பத்திர பதிவு ஆவணத்தை ரத்து செய்யக்கோருதல் மற்றும் சம்மந்தப்பட்டவர்களை கைது செய்யக்கோரும் கோரிக்கைகளின் மீது நடவடிக்கை மேற்கொள்ள 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டத்தில் வழிவகை இல்லை என தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019-ஆம் ஆண்டு மே திங்கள் 27-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்
திரு. J. வேலாயுதம்
28, போஸ் தெரு,
ஓடத்துறை (வழி)
கவுந்தப்பாடி, ஈரோடு – 638 455.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ. கோ. / உதரி

29/5/19

29/5/19